
# ஓ தீமோத்தேயுவே - பாகம் 02



ஆதி அப்போஸ்தலர் காலத்தில் ஆண்டவருக்காக வல்லமையாய் ஊழியம் செய்த அப்போஸ்தலர்களில் முதன்மையானவர், அப்போஸ்தலராகிய பவுல். அவர் இவ்வாறாக ஊழியம் செய்வதற்கு, அவருக்கு உறுதுணையாக ஆண்டவரால் கொடுக்கப்பட்ட உடன் ஊழியர்களில் முக்கியமானவர் தீமோத்தேயு ஆகும். மோசேயோடு யோசுவா இருந்தது போல், பவுலுக்கு உடன் ஊழியராக தீமோத்தேயு இருந்தார். அப்படிப்பட்ட ஊழியருக்கு அப்போஸ்தலராகிய பவுலினால் எழுதப்பட்ட நிருபங்களே 1 மற்றும் 2 தீமோத்தேயு ஆகும். அதில் அவர் தீமோத்தேயுவின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு வேண்டிய ஆலோசனைகளையும், தேவனுடைய வீடாகிய சபையை நடத்த வேண்டிய முறைகளையும், உபதேசத்துக்கு அடுத்த காரியங்களை பற்றியும் எழுதியுள்ளார். அவை தீமோத்தேயுவிற்கு மாத்திரம் அல்ல, இன்று நமக்கும் அது பிரயோஜனமாய் இருக்கிறது. அவற்றில் சில காரியங்களை குறித்து முதலாம் பாகத்தில் 1 தீமோத்தேயு நிருபத்திலிருந்து தியானித்தோம். இப்பொழுது தொடர்ந்து இவ்விரண்டாம் பாகத்தில் 2 தீமோத்தேயு நிருபத்திலிருந்து பின்வருமாறு தியானிப்போம்.

**“நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து,“ (2**

**தீமோத்தேயு 1:3).** இங்கு அப்போஸ்தலராகிய பவுலுக்கும், தீமோத்தேயுவிற்கும் இடையே இருந்த உறவின் ஆழம் வெளிப்படுகிறது. அப்போஸ்தலர் பவுல், இளம் ஊழியரான தீமோத்தேயுவை தன் ஆவிக்குரிய மகனாகவே பாவித்து, தீமோத்தேயுவிற்காக தேவனிடம் மன்றாடி, அவர் கண்ணீரை ஞாபகம் பண்ணி, அவரை காண வாஞ்சையாய் இருக்கிறதை காணலாம். இப்படிப்பட்ட ஒரு ஆவிக்குரிய உறவை அப்போஸ்தலராகிய பவுலுடன் உடையவராய் இருக்க, தீமோத்தேயுவும் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தவராய் காணப்பட்டார். இரண்டாம் தலைமுறை ஊழியர்கள் உருவாகவும், தேவனுடைய அநாதி திட்டங்கள் தொடர்ந்து நிறைவேறவும், இப்படிப்பட்ட அர்ப்பணிப்புகள் அவசியம். இதனை நாம் மோசே-யோசுவா, எலியா-எலிசா போன்ற பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் காணலாம். அவர்கள் தேவனுடைய திட்டத்தை நன்கு உணர்ந்தவர்களாய், அதற்காக தங்களை அர்ப்பணித்து, கீழ்ப்படிந்து, தொடர்ந்து தேவனுடைய திட்டம் நிறைவேற பிரயாசத்தோடு ஊழியம் செய்தனர். மேலும் **2 தீமோத்தேயு 1:4** இல், **"உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்."**. முதலாம் நிருபத்தில், விசுவாசத்தில் உத்தம குமாரன் என்று கூறிய பவுல், இங்கு அவரிடம் இருந்த மாயமற்ற விசுவாசத்திற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறார். மேலும், **"அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்." (2 தீமோத்தேயு 1:5).** இவ்வசனத்தின் மூலம், சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட ஆதி காலத்திலேயே, தீமோத்தேயுவின் குடும்பத்தார் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறியலாம். முதியவர்களுக்கு கீழ்படிந்தவராய், அவர்களிடம் இருந்த விசுவாசத்தை தானும் பெற்றுக் கொண்டவராய் தீமோத்தேயு இருந்தார். இப்படிப்பட்ட குணநலனே அவர் அப்போஸ்தலராகிய பவலுக்கும் கீழ்ப்படிந்து, அவருடைய ஊழிய வாஞ்சையையும் உள்வாங்கிக் கொண்டு, ஆண்டவருக்காக ஊழியம் செய்ய வைத்தது.

மேலும் **2 தீமோத்தேயு 1:6** இல், **"இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்."**. இப்படிப்பட்ட மாயமற்ற விசுவாசத்தினால் நிரப்பப்பட்டிருந்த தீமோத்தேயுவுக்கு, ஆண்டவர் பவுலின் மூலமாய் விசேஷித்த தேவ வரத்தையும் அளித்தார். அன்று எலியாவிடம் இருந்த ஆவியின் வரம்,

ரெட்டிப்பாய் கடந்து வந்தது போல, அப்போஸ்தலராகிய பவுலுக்கு அருளப்பட்ட தேவ வரங்களும், தீமோத்தேயுவிடம் கடந்து வந்தது. **2 தீமோத்தேயு 1:7-8** இல், **"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக்குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல், தேவவல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி."**. இங்கு ஊழியத்தினிமித்தம், சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலம் உண்டாகும் எதிர்ப்புகளை பொருட்படுத்தாமல், சுவிசேஷத்திற்காக தீங்கநுபவிக்க அழைக்கிறார். இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னது போல, உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, அவர்கள் என்னை துன்பப்படுத்துவது போல உங்களையும் துன்பப்படுத்துவார்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. **2 தீமோத்தேயு 1:13** இல், **"நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு."**. இங்கு ஆண்டவரிடத்தில் வைக்கும் அன்பு விசுவாசம் மட்டுமின்றி, தெளிவான உபதேசத்திற்கும், ஆண்டவருக்குள் வளர்வதற்கும், தேவையான ஆரோக்கியமான வசனத்திற்கு, கீழ்ப்படிந்து, அவற்றை கைக்கொள்ள வேண்டும் என்பதையும் தீமோத்தேயுவிற்கு கூறுகிறார். மேலும் இதற்கு பரிசுத்த ஆவியானவரின் துணை அவசியம் என்பதையும், **2 தீமோத்தேயு 1:14** இல் கூறுகிறார், **"உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்."**.

மேலும், **2 தீமோத்தேயு 2:1-3** வசனங்களில், **"ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி."**. இங்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையில் பலப்படும்படியாய், மேலும் பவுலாகிய தன் மூலமாய் கேட்ட வேத வசன உபதேசங்களை, மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் அறிவிக்கும்படியாய் கூறுகிறார். இங்கு மறுபடியும் பவுல் தன்னை ஒரு முன் உதாரணமாய் நிறுத்துவதை நாம் காணலாம். **என்னிடத்தில் கேட்ட** என்பது எவ்வளவாய் அவர் தீமோத்தேயுவிற்கு வேத வசன உபதேசங்களை போதித்தார் என்பதையும், அதனையே அவரும் கை கொள்ளும்படியாய் அறிவுறுத்துகிறார் என்பதையும் காணலாம். இங்கு **உண்மையுள்ள**

மனுஷர் என்பது மிக மிக முக்கியமானதாகும். வேத வசன உபதேசங்களை மற்றவர்களுக்கு கூறும் பொழுது, அதற்கு அவர்கள் முழுவதுமாய் கீழ்ப்படிகிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது மட்டுமே, அவர்கள் அதை மற்றவர்களுக்கும் அறிவிப்பார்கள். அவ்வாறு இல்லாதவர்களுக்கு வேத வசன உபதேசங்களை போதிப்பதினால் எந்த பயனும் இல்லை. ஏனெனில் அவர்களே கீழ்ப்படியாத பொழுது, மற்றவர்களுக்கு அவர்களால் எப்படி சத்தியத்தை கொண்டு செல்ல முடியும். மேலும், 2 தீமோத்தேயு 2:7 இல், **"நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்."**. இங்கு ஒரு ஆசிரியர், மாணவன் ஒருவனுக்கு கற்றுத் தருவதை போல் ஒவ்வொன்றையும் விளக்கி, அவற்றை சிந்தித்துப் பார்க்கும் படியாய் கூறுகிறார். ஆகிலும் **கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்** என்று, தீமோத்தேயு எல்லாவற்றையும் பவுலிடமே இருந்து படித்துக் கொண்டாலும், பெற்றுக் கொண்டாலும், அவற்றை ஊழியத்தில் அப்பியாசப்படுத்த, செயல்படுத்த ஆண்டவரே புத்தியை தர வேண்டும் என்பதையும் கூறுகிறார்.

2 **தீமோத்தேயு** 2:15 இல், **"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."**. இங்கு சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதித்தல் என்பது மிக முக்கியமானதாகும். இங்கு உபதேசத்திற்கு அடுத்த காரியங்களை நிதானமாய் பகுத்து போதிப்பது அவசியம் என்பதையும், அதுவே தேவனுக்கு முன்பாக உத்தம ஊழியராக அவரை நிறுத்தும் என்பதையும் அப்போஸ்தலராகிய பவுல் கூறுகிறார். ஆம் வேதவசனம் கூறும் சத்தியத்தை எவ்வித கலப்படமும் இன்றி, கேட்கிறவர்கள் உணர்ந்து கொள்ளத்தக்கதாக ஜாக்கிரதையாய், நிதானத்தோடு போதிக்க வேண்டும். இல்லையேல் அது துர் உபதேசங்களுக்கு வழிவகுக்கும். இன்று சபையில் காணப்படும் பிரச்சனையும் இதுவே. இன்று சபையில் போதிக்கிறவர்கள் சரியான ஆயத்தத்தோடு, தேவனிடத்தில் இருந்து வசனத்தை பெறாமல், வெறும் மக்களை திருப்திப்படுத்த உபதேசிப்பதால், சபை மக்கள் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் வளர முடிவதில்லை.

2 **தீமோத்தேயு** 2:22 இல், **"அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளு கிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு."**. இங்கு ஒரு புறம் ஆவிக்குரிய வாழ்வில், உபதேச ஊழியத்தில் எவ்வாறு வளர வேண்டும் என்று

ஆலோசனைகள் கூறினாலும், அதே நேரத்தில் வாலிபனாகிய தீமோத்தேயு தன் தனிப்பட்ட வாழ்விலும், எவ்வாறு பரிசுத்தத்தை காத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். ஆம் இன்றைய காலகட்டத்திலும் இது மிக முக்கியமான ஒன்றாகும். ஆண்டவருக்காக துடிப்புடன் ஊழியம் செய்யும் இன்றைய இளம் தலைமுறை ஊழியர்களை, பிசாசு மாம்சத்துக்கு அடுத்த காரியங்களில் விழ செய்து, அவர்களுடைய ஊழியத்தை ஒன்றுமில்லாமல் போக செய்வதை நாம் இன்று கண்கூடாக பார்க்கிறோம். எனவே சுத்த இருதயத்தை காத்துக் கொள்வதும், நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும் நாடுவது மிக அவசியமானதாகும். மேலும், **"புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு. கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனு மாயிருக்கவேண்டும்."** (2 **தீமோத்தேயு** 2:23,24) என்றும் ஆலோசனை கூறுகிறார். இங்கு தெளிவாக சத்தியத்தை அறியாதவர்களுடன் தர்க்கம் செய்து சண்டையிடுவது பிரயோஜனமற்றது என்பதையும், அதற்கு பதில் அவர்கள் எதிர் பேசினாலும், பதிலுக்கு எதிர் பேசாமல், சாந்தமுள்ளவராகவும், அதனால் உண்டாகும் தீமையை சகிக்கிறவராகவும் இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலராகிய பவுல் புத்தி சொல்கிறார். மேலும், **"எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசான வனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்."** (2 **தீமோத்தேயு** 2:25,26). இங்கு நாம் காண்கிறபடி, பிசாசானவனின் இச்சையின்படி செய்ய அவனால் மயக்கப்பட்டு, அவன் கண்ணியில் அகப்பட்டு, சத்தியத்தை உணர்ந்து கொள்ள முடியாதபடி, தெளிவில்லாதவர்களாய், அதற்கு எதிர்த்து பேசுகிறவர்களாய் இருப்போரை, மனதிரும்ப செய்ய, சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் என்றும் தீமோத்தேயுவிற்கு ஆலோசனை கூறுகிறார்.

2 **தீமோத்தேயு** 3:10-13 வசனங்களில், **"நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார். அன்றியும் கிறிஸ்து**

**இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.“**. இங்கு அப்போஸ்தலராகிய பவுல் தன்னை மறுபடியும் முன்மாதிரியாக, இளம் ஊழியரான தீமோத்தேயுவிற்கு முன் நிறுத்துவதை காணலாம். மேலும், **2 தீமோத்தேயு 3:14,15** வசனங்களில், **“நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.“**. இங்கு **நீ சிறு வயதுமுதல்** என்பது மிகவும் முக்கியமான வார்த்தையாகும். அப்போஸ்தலராகிய பவுல் தீமோத்தேயுவை பற்றி முழுவதுமாக அறிந்து வைத்திருந்தார் என்பதை காணலாம். எனவே சிறுவயது முதல் அவர் கொண்டிருந்த வேத வசன தெளிவில் உறுதியாக இருக்க கட்டளையிடுகிறார். ஏனெனில், **“வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.“** (**2 தீமோத்தேயு** 3:16,17).

**2 தீமோத்தேயு 4:2-4** வசனங்களில், **“சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித் தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.“**. இங்கு அப்போஸ்தலராகிய பவுல், மறுபடியும் மறுபடியும் வேதவசன உபதேசத்தை குறித்து தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கூறுவதை காணலாம். ஏனெனில் அதுவே விடுதலையை தரும். அதுவே விசுவாசத்தை பெலப்படுத்தும். நித்திய ஜீவனுக்கு வழி நடத்தும். மேலும், **“நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை**

**விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்."** (2 **தீமோத்தேயு** 4:5-8). இங்கு ஊழியத்தில் தீமோத்தேயுவை உற்சாகப்படுத்தும் அப்போஸ்தலராகிய பவுல், அதற்கு தன்னையே உதாரணமாக நிறுத்தி, இந்த ஊழியத்தினிமித்தம் தனக்கு கிடைக்கப் போகும் மகிமையான நீதியின் கிரீடத்தை குறித்தும், அதை தீமோத்தேயுவும் பெற முடியும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

**"கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக. நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன்."** (2 **தீமோத்தேயு** 4:14-15). இங்கு பொதுவாக மாத்திரமல்ல, தனிப்பட்ட முறையிலும் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்போரை அடையாளம் காட்டி, அப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுரை கூறுகிறார். **"நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு."** (2 **தீமோத்தேயு** 4:9) மற்றும் **"துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்துவந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக்கொண்டுவா."** (2 **தீமோத்தேயு** 4:13), என்ற வசனங்கள் சரீர பிரகாரமாகவும், அப்போஸ்தலராகிய பவுலுக்கும், தீமோத்தேயுவிற்கும் இடையே இருந்த உறவை வெளிப்படுத்துகிறது. இறுதியாக, **"கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியுடனேகூட இருப்பாராக. கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்."** (2 **தீமோத்தேயு** 4:22). என்று வாழ்த்து கூறி தன் நிருபத்தை முடிக்கிறார் அப்போஸ்தலராகிய பவுல். 1 மற்றும் 2 தீமோத்தேயு நிருபங்கள் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டிருந்தாலும், அதிலுள்ள சத்தியங்கள் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும். குறிப்பாக சபை ஊழியத்தை, வேத வசன உபதேச ஊழியத்தை / போதக ஊழியத்தை செய்வோர், அதை எப்படியாக ஜாக்கிரதையோடு செய்ய வேண்டும் என்பதையும், தேவனுடைய அநாதி தீர்மானம் என்ன என்பதையும், ஊழியதினிமித்தம் தீங்கநுபவித்தாலும், இறுதியில் அதற்கு கிடைக்கும் பலன் என்ன என்பதையும், இந்நிருப்பத்தில் அப்போஸ்தலராகிய பவுல், தீமோத்தேயுவிற்கு தெளிவாக விளக்குகிறார். இவற்றை நாமும் விளங்கிக்கொண்டு, அப்போஸ்தலராகிய பவுலை போல, தீமோத்தேயுவைப்போல, நம்மையும் தேவனுக்கு அர்ப்பணிப்போவோமாக. ஆமென், அல்லேலூயா.